**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**MCOP No.55/2024**

நாள் 24.04.2025

**ம.சா.1. 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

எனது கணவர் இறக்கும் போது எத்தனை வயது இருக்கும் என்றால் சுமார் 60 வயது இருக்கும். எனது கணவர் படிக்கவில்லை. எனது கணவரின் ஆதார் அட்டை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1-ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநர் முறையாக தான் சாலை விதிகளை அனுசரித்து சென்றார் என்றும், எனது கணவர் தான் சாலையில் நடுவே சென்றதால் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு எனது கணவரின் அஜாக்கிரதையும், கவனக்குறைவு தான் காரணம் என்றால் சரியல்ல. எனது கணவர் விவசாய வேலை செய்து மாதம் ரூ.25,000/- வருமானம் பெறுவது குறித்து எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1-ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1-ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் ஒப்பந்த விதிகளை மீறியதால் 1-ம் எதிர்மனுதாரர் தான் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. நான் மனுவில் கூறியுள்ள 20 லட்சம் இழப்பீடு அதிகமாக உள்ளது என்று சொன்னால் சரியல்ல. 1-ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் உரிமையாளர் என்பதால் அவர் தான் எனக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்றும், 2-ம் எதிர்மனுதாரர் நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல.

2-ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யக் கூடியது என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை -இல்லை.</u>**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.